

ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளரும், ஆலந்தூர் 12வது மண்டல குழு தலைவருமான என்.சந்திரன்– நிர்மலா சந்திரன் ஆகியோரின் மகன் டாக்டர் சி.மகேஷ் – முகப்பேரை சேர்ந்த ஆ.சேகர், சே.பவானி ஆகியோரின் மகள் டாக்டர் எஸ்.ஷவானி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா நீலாங்கரை கிழக்கு கடற்கரை சாலை காந்திநகர் ஆர்.கே. கன்வென்ஷன் சென்டரில் நடைபெற்றது. விழாவில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், மா.சுப்பிரமணியன், தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி, ஜெகத்ரட்சகன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணைமேயர் மற்றும் கழகத்தினர் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர். முடிவில் ஆலந்தூர் 167வது வார்டு கவுன்சிலர் துர்காதேவி நடராஜன் நன்றி கூறினார்.

கழகத் தலைவர் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மேயர் ரெ. மகேஷ் தலைமையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நேற்று (16.02.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் மனோ தங்கராஜ், கழக சட்டத்துறை செயலாளர் – மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டு WAR ROOM–ஐ திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், துணைச் செயலாளர் ஜெ. பச்சையப்பன், தலைமைக் கழக வழக்கறிஞர் கே.ஜே. சரவணன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே. குமார் சேரலாதன், தலைவர் இ. கிங்ஸ்லி கோல்டுவின், துணை தலைவர் பி.லீனஸ் ராஜ், துணை அமைப்பாளர்கள் அசன் கமல் இ.அப்பாஜி, எஸ்.சலீம், ஆர்.பிரதாப், கே.எஸ்.பழனி, சி.சுரேஷ் மற்றும் அரசு வழக்கறிஞர்கள், கழக வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் – வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் சார்பில்

முதல்வர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்! சேலம் சுஜாதா - க.சுந்தர் சிறப்புரை!

சிறுவேடல் க.செல்வம் எம்.பி. - சி.வி.எம்.பி.எழிலரசன் பங்கேற்பு - படுநெல்லி பி.எம்.பாபு தலைமை!

காஞ்சிபுரம், பிப். 17 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் வாலாஜாபாத் வடக்கு ஒன்றிய தி.மு.கழகம் சார்பில் கழகத் தலைவர் - திராவிட மாடல் அரசின் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (17.2.2024 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு ஏனாத்தூர் கலைஞர் திடலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் படுநெல்லி பி.எம்.பாபு தலைமை வகிக்க, ஒன்றியக்குழுத் தலைவர் ஆர்.கே.தேவேந்திரனன் வரவேற்றுப் பேசுகிறார்.

வி.வெங்கட்ராமன், இ. ராஜா, ஜி.மனோகரன், பி. கரிமுல்லா, எஸ்.ரகுராமன், என்.ஏகாம்பரம், எஸ்.பாண்டியன், என்.மேகநாதன், கே.வெங்கடேசன், ஆர்.சாந்தகுமார், பி.மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., தலைமை கழக பேச்சாளர் சேலம்.சுஜாதா, மாவட்ட துணைச் செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., கழக சிறுபான்மை அணிச் செயலாளரும் தொகுதி பார்வையாளருமான டாக்டர் அ.சுபேர்கான், கழகப் பேச்சாளர் வன்னை புகாரி, எஸ்.ராஜலட்சுமிகுஜராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் எஸ்.பி.. பூபாலன், பி.ஏ.வி,.பழனி, கவிதாடில்லிபாபு, கே.ஆறுமுகம், .க.பார்த்திபன், எம். திருஞானசம்பந்தம், எம். அருள்முருகன், . என்.ஜெயபால், எஸ்.கே.சுரேஷ், ஆர். கே.சசிகுமார், இ.அப்பன் , ஒன்றியக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் எஸ்.உலகநாதன், சுனிதா பாபு, வேண்டாமிர்தம் வேதாசலம் , லோகநாயகி திருஞானசம்மந்தம், பி.லோகுதாஸ் கௌரி, தியாகராஜன்,

டி . என் . ஆறு மு க ம் , சுகுணா தேவேந்திரன், காமாட்சி கருணாநிதி, தனலட்சுமி ஜெயவேல், சுமதி ஜெயராமன், கே.பலராமன், எம்.குமார், பி.குமரகுரு, சைலஜா பரந்தாமன், ஜி. சுரேஷ்பாபு, சாந்தி சண்முகம், சுமதி விஜயகுமார், மணிமேகலை லோகநாதன், வள்ளியம்மாள் செல்வம், கீதா மகேந்திரன், கீதா மகேந்திரன், குமரேசன், பிரியா வெங்கடேசன், சரளாதேவி, ஏகாம்பரம்

கிளை கழக செயலாளர்கள் டி.ஏழுமலை, கே. பாண்டுரங்கன், டி.என். கே.பரஞ்சோதி, எம்.உமாபதி, டி.சூரி, கே.தயாளன் , கே.லோகநாதன், டி.ராதாகிருஷ்ணன், இ.நடராஜன், எஸ்.நடராஜன், கே.கௌரி நாதன், பி.வரதராஜ், ,எம். ஜோதி, வி.ஜெயராமன், ஜெ.ரகு, சு.பார்த்திபன், வி.சம்பத்குமார், எம்.கணேசன், எஸ்.தணிகாசலம், ஜி. ரமேஷ், எம்.ரங்கன், து. வேழவேந்தன், ஆர்.குலசேகரன், எ.முரளி, ஜெ.சரவணன், எம்.கோவலன், எம். தட்சிணாமூர்த்தி, தி. சுரேஷ், என்.தியாகு, ப. பொன்னன், டி.மோகன் பாபு, கு.மாரிமுத்து, என். அருண்குமார், எஸ்.வெங்கடேசன், கே.செல்வம், ,ஆர். டில்லி, எம்.வெங்கடேசன், எம்.அப்பாஸ் அலி, ப. கோவேந்தன், ஆர்.லோகநாதன், எ.ரஜினி, ஆர். கோபால், , ஏ.குமரவேல், டி.சுரேஷ்,, ஜி.மாய கிருஷ்ணன், டி.ரமேஷ், , எஸ்.நந்தகுமார், பெ.கண்ணாயிரம், ,பி.பக்தவச்சலம், எஸ்.சக்திவேல்,, ஈ.சிவராமன், வி. பஞ்சமூர்த்தி, ஏ.விஸ்வநாதன் ,ஆர்.சம்மந்தமூர்த்தி, ஜெ.பாபு , எம்.சிவலிங்கம், வ.பரந்தாமன், எ.பாண்டியன், ஏ.ராமமூர்த்தி,,பி. ராமச்சந்திரன், ஆ.ஞானமுத்து, எம்.புகழேந்தன், கோ.அரி, எஸ்.ராமு, உ. சேகர் டி.நாகப்பன், வி. ஜெ.மனோகரன், ஆர்.சாலமோன், சி.ஜோதி, டி.ராமதாஸ், பி.தேவன், கே.வெங்கட்ராமன், கே.தென்னரசு, பி.சுப்பிரமணி, வி.ஆசைதம்பி,

கே.லிங்கநாதன், எஸ். ராமு, கே.மாரிமுத்து, ஜி. குணசேகரன், எ.மணி, தே . தி ல் லை நா த ன் , டி.ராஜேஷ், எஸ்.பன்னீர், கே.மணி, வி.மணி, எஸ். பெருமாள், என்.ரவி, எம். தியாகராஜன், என்.வெங்கடேசன், எஸ்.ஆரவாமுதன், டி.கருணாநிதி,

டி . ரா தா கி ரு ஷ் ண ன் , டி.வரதராஜ், ஆர்.மாசிலாமணி , பி.தட்சிணாமூர்த்தி, எம்.கோவிந்தராஜ், என். பார்த்திபன், ஜெ.கார்த்திகேயன், என்.சிவபிரகாசம், எஸ்.உமாபதி, எம்.ஏழுமலை, எ.ஐம்புலிங்கம், ப. சபாபதி, எம்.நாகூர், பி. ரவி, கே.ஜான்சிற்றரசு, ஏ. மகாவிஷ்ணு, எம்.குமார், வி.தியாகராஜன் முன்னாள் நிர்வாகிகள் எம்.ஆனந்தன், எஸ்.கே.மஞ்சுநாதன், என். நரசிம்மன், இ.செல்வம், பி.குப்பன், இ.மாதவன், வி.எம்.மணி, கு.பரந்தாமன், ஜெ.ராமன், டி.என். காமகோட்டி, டி.ஐயப்பன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

கே.சங்கர், ஆர்.தட்சிணாமூர்த்தி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மார்ச் 1 கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்!

ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் சிறப்பாக கொண்டாடுவோம்!

நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, பிப். 17- சென்னை அண்ணா அறிவாலயத்தில் காலை 11.00 மணியளவில் திமுக ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம், ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணைத் தலைவர், வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் முன்னிலை வகித்தார்.

மேலும் இக்கூட்டத்தில் மார்ச்1 கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுதல்.

27.02.2024 அன்று கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தை சிறப்பாக நடத்துதல். 2024நாடாளுமன்ற தேர்தல் பணியினை ஆதிதிராவிட நல்குழு நிர்வாகிகள் சிறப்பாக செயலாற்றுதல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தினை சிறப்பாக நடத்திட சென்னை காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் இணைச் செயலாளர்கள் வி.பி. ராஜன், திப்பம்பட்டி ஆறுசாமி, மருதூர் ராமலிங்கம், துணைச் செயலாளர்கள் மு.பொன்தோஸ், மாரியப்பன் கென்னடி, பி.துரைசாமி, சி.தசரதன், பாரமானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரசு

தென்காசி நகராட்சி

ந.க.எண். 572/2024/இ1 — ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்: 05.02.2024

தென்காசி நகராட்சி ஆணையாளர் மூலம் தகுதி வாய்ந்த வகுப்பு இரண்டு மற்றும் அதற்கு மேல் உள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளி வாயிலாக **இரண்டு உறை** முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் **23.02.2024 மாலை 3.00 மணி** வரை வரவேற்கப்படுகிறது.

வ.எண்	ஒப்பந்த தொகை (ரூ இலட்சத்தில்)	ஒப்பந்தப்புள்ளி டிவம் கிடைக்கும் விபரம்	ஒப்பந்தப்புள்ளி திறப்பு விபரம்	பணி செய்து முடிக்க வேண்டிய காலம்
15வது நிதிக்குழுமம் (15th CFC Untied Grant) 2023-24				
1	76.00	17.02.2024	23.02.2024 பிற்பகல் 3.30 மணி	180 நாட்கள்
2	75.50	17.02.2024	23.02.2024 பிற்பகல் 3.30 மணி	180 நாட்கள்
3	75.50	17.02.2024	23.02.2024 பிற்பகல் 3.30 மணி	180 நாட்கள்

ஒப்பந்தப்புள்ளி விபர அட்டவணை மற்றும் நிபந்தனைகள். https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் 17.02.2024 முதல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் தென்காசி, நகராட்சி ஆணையர் அவர்களால் 23.02.2024ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை மின்னணு முறை மற்றும் நேரடி ஒப்பந்த உறை முறைகளில் இரண்டு உறை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி தகுதி தமிழ்நாடு அரசின் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் மற்றும் அதை சார்ந்த விதிகளின்படி கூர்ந்தாய்வு செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளிகளுக்கான முன் வைப்புத்தொகை பணி மதிப்பீட்டில் 1 (ஒரு) சதவிகிதத்திற்கான வங்கி கேட்பு வரைவோலையாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். மின்னணு ஒப்பந்தத்திற்கு முன்வைப்புத் தொகையை வங்கி வரைவோலையாக தனி உறையில் வைத்து ஒப்பந்தப்புள்ளி பெட்டி மூடுவதற்கு முன்பாக ஒப்பந்தபுள்ளி பெட்டியில் சமர்ப்பிக்கவேண்டும். நகராட்சி ஆணையருக்கு எந்தவித ஒப்பந்தபுள்ளியையும் ஏற்கவோ மறுக்கவோ முழு அதிகாரம் உண்டு. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் விடுமுறையாக அறிவிக்கும்பட்சத்தில் மறு வேலை நாளில் அதே நேரம் ஒப்பந்தபுள்ளி திறக்கப்படும். இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி: commr.tenkasi@tn.gov.in தொலைபேசி எண்: 04633–222228

செ.ம.தொ இ./1032/ஒப்பந்தப்புள்ளி/2024 — ஆணையாளர், தென்காசி நகராட்சி



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.ஆறுமுகம் மற்றும் மாவட்ட பிரதிநிதி ச.ஆறுமுகம் இல்ல திருமண வரவேற்பு விழா நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். அருகில் மாவட்ட கழக செயலாளர்கள் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, மாதாவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் ஒற்றுமையை உறுதி செய்யும்! "இந்தியா கூட்டணி"

இந்திய ஒன்றியத்தை இந்துக்களுக்கான "இந்து ராஷ்டிர மாக" உருவாக்குகின்ற லட்சியத்தை அடிப்படையாகக் கொண்ட ராஷ்டிரிய சுயம் சேவக் சங் (RSS) - என்ற மதவாத அமைப்பின் அடிப்படை லட்சியத்திற்கு செயல் வடிவம் கொடுக்கின்ற ஆக்கபூர்வமான முயற்சியில் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் ஒன்றிய ஆட்சி உருவான நாள் தொடங்கி திட்டமிட்ட தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது என்பதை நாட்டு மக்கள் மிக நன்றாகவே அறிவார்கள்.

பிரதமர் நரேந்திரமோடி ஒன்றியத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் ஜம்மு காஷ்மீர் பகுதிக்கு இந்திய அரசியல் சட்டத்தின் 370வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டு வந்த சிறப்பு உரிமைகள் ரத்து செய்யப்பட்டு ஜம்மு காஷ்மீர் பகுதி ஒன்றிய ஆட்சிப் பிரதேசங்களாக மாற்றப்பட்டது. இந்த மிக முக்கியமான அரசியல் சட்டத்தினுடைய 370 வது பிரிவு ரத்து செய்யப்பட்டு அந்த பகுதி ஒன்றிய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளாக (Union territories) மாற்றப்பட்டது.

இது குறித்து அந்த மாநில மக்களின் ஒப்புதலைப் பெற்றிடவில்லை. ஒன்றிய அரசின் இத்தகைய திடீர் நடவடிக்கைக் காரணமாக அங்கு தொன்றுதொட்டு வாழ்ந்து கொண்டு வரும் இஸ்லாமிய மக்கள் பெரிதும் கவலையும், அச்சமும் அடைந்துள்ளனர். இதனை தொடர்ந்து இந்திய அரசியல் சட்டத்திலுள்ள குடியுரிமை தொடர்பான சரத்துக்களில் (Article No 5, Indian costitution) மாற்றங்களை கொண்டு வந்தார்கள். ஒன்றிய அரசு இந்திய அரசியல் சட்டத்தில் மேற்கொண்டுள்ள இந்தத் திருத்தங்கள் இந்திய ஒன்றியத்தில் தொன்று தொட்டு வாழும் மதச்சிறுபான்மை மக்களிடம் மிகுந்த அச்சத்தை உருவாக்கியுள்ளது.

இந்த அரசியல் சட்டத் திருத்தத்தின் காரணமாக மதச்சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சட்ட விற்பன்னர்கள், பத்திரிகையாளர்கள் ஆகிய பிரிவினர், மதச்சிறுபான்மை மக்களின் அச்சத்திற்கான அடிப்படைக் காரணங்களை ஊடகங்கள் வாயிலாக விளக்கமாகத் தெரிவித்துள்ளார்கள் என்பது நாட்டு மக்கள் அறிந்த செய்திகள்தான். ஒன்றிய அரசு இந்த எதிர்ப்புகளை முனைமுறியச்செய்யும் வகையில் இந்த சட்டத்தின் அமலாக்கம் குறித்து தொடர்ந்து அமைதி காட்டியது. ஆனால், திடீரென வரவிருக்கின்ற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக குடியுரிமைத் திருத்தச் சட்டம் அமலுக்கு வருமென ஒன்றிய உள்த்துறை அமைச்சர் ஊடகங்கள் மூலமாக சமீபத்தில் உறுதிபடுத்தி உள்ளார்.

இதனைத்தொடர்ந்து மதச்சிறுபான்மையினருக்கு கலக்கத்தையும், அச்சத்தையும் வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக உருவாக்க வேண்டுமென்ற உள் நோக்கில் உத்தரக்காண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தி தங்களின் திட்டத்திற்கு வெள்ளோட்டம் பார்க்க ஒன்றிய பாரதிய ஜனதாக் கட்சியின் ஆட்சி முனைந்துள்ளது என்பதை நம்மாலே அறிய முடிகிறது.

இதற்கிடையில் அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டு, குழந்தை ராமர் சிலையை பிரதிஷ்டை பண்ணுகின்ற நிகழ்ச்சியை எந்த அளவிற்கு நாட்டினுடைய பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் கன்னியாகுமரியிலிருந்து, காஷ்மீர் வரையிலும் விளம்பரப்படுத்தினார் என்பதும், அந்த நிகழ்ச்சியின் முன்னேற்பாடாக இந்திய ஒன்றியப் பகுதியில் உள்ள புன்னியத் தலங்களுக்கெல்லாம் சென்றார் என்பதும், கம்பராமாயணத்தைப் பாராயணம் செய்யச்சொல்லி நீண்ட நேரம் கேட்டார், புனித நீராடினார் என்கின்ற பிரதம அமைச்சரின் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அச்சு ஊடகங்களிலும், மற்றைய மின் ஊடகங்களிலும் பெரிய அளவில் வியப்பான செய்திகளாக வெளியிடப்பட்டன.

சிறப்புப் பேருந்துகளும், இரயில்களும் அயோத்தியை நோக்கித் திருப்பி விடப்பட்டன. இவ்வளவு விளம்பரங்களோடும், ஆடம்பரங்களோடும் இந்திய நாட்டின் பிரதமரே முன்னின்று நடத்துகின்ற நிகழ்ச்சி, ஒரு ஆன்மீக நிகழ்ச்சி என்றுமட்டும்தான் என மதிப்பீடுசெய்யவியலாது. நாடாளுமன்றத்தினுடைய தேர்தல் - 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வரவிருக்கிறது.

ஆன்மீகத்தில் அக்கறையுள்ள பழமையான மடாலயங்களைச் சார்ந்த சங்கராச்சாரியார்கள், அயோத்தி ராமர் கோயில் முழுமையாக கட்டி முடிக்கப்படாத நிலையில், அயோத்தி ராமர் கோயிலைத் திறந்து வைத்ததும், குழந்தை ராமர் சிலையை பிரதிஷ்டைப் பண்ணுவதும் பொருத்தமான நடவடிக்கையாக இருக்காது என்ற கருத்தை தெரிவித்துள்ளார்கள். இத்தகைய குழப்பமான சூழ்நிலையில் நாட்டின் பிரதம அமைச்சரே முன்னின்று அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவை நடத்துவதும், குழந்தை ராமர் சிலையை பிரதிஷ்டை பண்ணுவதும் முற்றிலும் அரசியல் கலப்பில்லாத புனிதமான ஆன்மீக நோக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நவடிக்கைகள் என்று எடுத்துக் கொள்ள இயலுமா? என்பது தான் இந்திய நாட்டு மக்களின் உள்ளத்தில் எழுந்திருக்கும் பூதாகரமான கேள்வியாகும்?

அதுமட்டுமல்ல இந்த நிகழ்ச்சியினை தொடர்ந்து நாட்டு மக்களின் ஜயப்பாட்டை வலுப்படுத்தி உறுதி செய்யும் வகையில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் நாடாளுமன்ற உரையும் உறுதி செய்கிறது. ஆம்! தன்னுடைய நாடாளுமன்ற உரையில். தங்களின் தேசிய ஜனநாயக - அரசியல் கூட்டணிக்கு(NDA) 400 இடங்கள் கிடைக்கும் என்று உறுதிப்பட தெரிவிக்கிறார். அதுமட்டுமல்ல காங்கிரஸ் கட்சியையும், "இந்தியா" கூட்டணியையும் ஏளனமாக விமர்சிக்கிறார்.

பிரதமர் மோடி, தன்னுடைய நாடாளுமன்ற உரையில், மிகப்பெரிய முடிவினை, 2024ம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலுக்குப் பின்னர் எடுக்கப்படும் என்றும், அந்த முடிவுகள் 1000 ஆண்டுகாலத்திற்கு பயனுள்ளதாக இருக்குமெனக் கூறுகிறார், அப்படியென்ன அதிசயத்திட்டத்தை வைத்திருக்கிறார் என்பதற்கான விளக்கத்தை அவர் தெரிவிக்கவில்லை, இத்தகைய கற்பனைக் கட்டுக்கதைகள் மூலம் மக்களை, நம்பவைக்க முடியுமென நம்புகிறார். ஆனால் மக்கள் கணினியுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை பிரதமர்மோடி அவர்கள் மறந்துவிட்டு உரையாற்றியுள்ளார்.

எதையும் ஆய்ந்தறிந்து உண்மைகளை கண்டறியும் ஆற்றல் பெற்ற அறிவுசார் சமூகம், நிச்சயமாக பிரதமரின் கற்பனை உரையினை கணக்கில் எடுத்துகொள்ளமாட்டார்கள் என்பது மட்டும் உறுதி. மேலும் நிதி ஒதுக்கீடு நடைமுறையிலும் எதிர்க்கட்சிகள் ஆட்சியில் உள்ள மாநிலங்களுக்கு முறையான ஒதுக்கீடும் இல்லை, இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு அந்த மாநிலங்கள் எதிர்க்கட்சிகளின் ஆட்சி நடைபெறுகிறது என்பதால், சிறப்பு நிதியினை ஒதுக்குவதில்லை.

இந்த ஒருதலைப் பட்சமான நடைமுறைகளை விமர்சித்து தென் மாநிலங்களிலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் விமர்சனம் செய்தால் பிரதமஅமைச்சரும், நிதிஅமைச்சரும் எதிர்க்கட்சித்தலைவர்கள் வடக்கு, தெற்கு என்ற பிரிவினை வாதம் பேசுவதாக குற்றம் சாட்டுகின்றார்கள் . ஒன்றிய ஆட்சிப் பொறுப்பிலுள்ள பாரதிய ஜனதாக் கட்சி சார்ந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், ராஷ்டிர சுயம் சேவக் சங்(RSS) என்ற மதவாத அமைப்போடு இணைந்து, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியின் மூலம் இந்துக்களுக்கான "இந்துராஷ்டிரமாக" இந்தியாவை உருவாக்கிட திட்டமிட்டுள்ளார்கள் என்பது வெளிப்படையாக தெரிகிறது.

இவர்களின் இந்த திட்டம் இந்திய அரசியல் சட்டத்திற்கு விடப்பட்ட சவால்! அதுமட்டுமல்ல: இந்திய ஒன்றியத்தின் நிலப்பரப்பில் தொன்றுதொட்டு வாழ்ந்து வரும் மதச்சிறுபான்மை மக்களுக்கான எச்சரிக்கையும் ஆகும். நாட்டின் விடுதலைக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட தேசிய தலைவர்கள் கட்டமைத்த இந்திய நாட்டின் பன்முகத்தன்மைக்கும், மதச்சார்பற்ற தன்மைக்கும், வேற்றுமையில் ஒற்றுமை, என்ற கோட்பாட்டிற்கும் வைக்கப்பட்ட வெடிகுண்டாகவே செயல்பட்டு நாட்டின் ஒற்றுமையை சிதறடிக்கும் .

பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்

இந்த உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் விழிப்புணர்வை வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மக்கள் பெற்றிட வேண்டும், மதவாத சக்திகளின் இந்த நாசகாரச் சிந்தனைகளை இந்த மண்ணை விட்டு விட்டு அப்புறப்படுத்த வேண்டும் என்பதே இந்திய நாட்டு மக்களின் சிந்தனையும் செயலாகவும் இருந்திட வேண்டும்.

வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தல் என்பது, இந்திய நாட்டின் அடையாளங்களை முற்றிலும் மாற்றிட நினைக்கும் மதவாதக் கூட்டத்திற்கும், தேசியத்தலைவர்களும், இந்திய அரசியல் சட்டமும் உருவாக்கித்தந்திருக்கின்ற நாட்டின் நிரந்தர ஒற்றுமைக்கான வேற்றுமையில் ஒற்றுமையை உருவாக்கும் மதச்சார்பற்ற கோட்பாட்டிற்கும், சமூக நீதிக்கோட்பாட்டிற்கும் நடைபெறவுள்ள போர்க்களமாகும். எனவே இந்த நாடாளுமன்றத் தேர்தல் போர்க்களத்தில், மதவாத சக்திகளைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யவேண்டிய தலையாய கடமை இந்திய குடிமகன் ஒவ்வொருவருக்கும், உண்டு என்பதை நினைவுப்படுத்துவதோடு, இந்திய ஒற்றுமையின் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு வாக்காளரும் இந்தியக் கூட்டணியை ஆதரிக்க வேண்டுமென்ற சபதமெடுத்துக் கொள்ளவேண்டுமென்பது காலத்தின் கட்டாயம் வரலாற்றின் நிர்ப்பந்தமும் ஆகும்.